கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

# HISS 4102 History of Modern Political Thoughts

நேரம் : 03 மணித்தியாலங்கள்

**பகுதி – I இல் இருந்து யாதேனும் மூன்று வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து யாதேனும் ஒரு வினாவிற்கும் விடை தருக.**

## பகுதி – I

01.(அ) அரசியல் சமுதாயத்தின் பின்வரும் மூலக்கூறுகள் தொடர்பாக அரிஸ்ரோட்டில் கூறும் கருத்துக்களைத் தெளிவுபடுத்துக.

I. குடும்பம் (08 புள்ளிகள்)

II. எஜமான் - அடிமை (07 புள்ளிகள்)

(ஆ) அரிஸ்ரோட்டில் கூறும் பொதுவுடமைக் கருத்துக்களைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(அ) அரிஸ்ரோட்டில் கூறும் "பிரஜாவுரிமை" (12 புள்ளிகள்)

(ஆ) அரிஸ்ரோட்டில் கூறும் "வர்க்கமுறை" (13 புள்ளிகள்)

03. (அ) மனிதன் அடிப்படையில் "சுயநலம்", "தற்பெருமை" கொண்டவன் என மாக்கியவல்லி கூறும் கருத்துக்களைத் தெளிவுபடுத்துக. (10 புள்ளிகள்)

(ஆ) ஆட்சிக்கலை தொடர்பாக இளவரசன் என்ற நூலில் மாக்கியவல்லி கூறும் ஆலோசனைகளைத் தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

04. (அ) வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தின் அடிப்படையில் சமூகத்தின் அபிவிருத்தியை கால்மாக்ஸ் எவ்வாறு வகைப்படுத்துகின்றார். (15 புள்ளிகள்)

(ஆ) வர்க்கங்கள் தொடர்பாக கால்மாக்ஸ் கூறும் கருத்துக்களை விபரிக்குக. (10 புள்ளிகள்)

## பகுதி – II

05. "தொமஸ் அகூனாஸின் சிந்தனைகள் ஐரோப்பாவில் முடியாட்சி முறையின் ஏதேச்சாதிகாரத்திற்கு ஏதுவாகிவிட்டன." இக்கூற்றினை பரிசீலனை செய்க. (25 புள்ளிகள்)

06. பிரெஞ்சுப் புரட்சி ஜனநாயக முறையின் வளர்ச்சி என்பவற்றில் றூசோவின் சிந்தனைகள் ஏற்படுத்திய செல்வாக்கினை மதிப்பிடுக. (25 புள்ளிகள்)